# காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2021-22 ம் நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை

௳௳௳

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017–ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.615 / க்யூ 1 / 2017 நாள்.20.10.2017 ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண்.111/2017-ன்படி, காஞ்சிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.10.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண். | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர்,<br>காஞ்சிபுரம். | 1 | மாவட்ட ஆட்சியர்,<br>காஞ்சிபுரம். |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>காஞ்சிபுரம். | 2 | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| 3 | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>காஞ்சிபுரம். | 3 | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>காஞ்சிபுரம். |
| 4 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>காஞ்சிபுரம். | 4 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>காஞ்சிபுரம். |
| 5 | துணை இயக்குநர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>காஞ்சிபுரம். | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,<br>காஞ்சிபுரம். |
| 6 | முதன்மை கல்வி அலுவலர்,<br>காஞ்சிபுரம். | 6 | உதவி இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சித்துறை,<br>காஞ்சிபுரம். |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர்,<br>காஞ்சிபுரம். | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>காஞ்சிபுரம். | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் @ ஒரகடம். |
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்),<br>காஞ்சிபுரம். | 9 | மாவட்ட வன அலுவலர், காஞ்சிபுரம். |

| | | | |
|---|---|---|---|
| 10 | திரு. ரா. ஜெயராமன்,<br>த/பெ. அ. ராமஜெயம்,<br>செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் குவாரி ஒப்பந்த தாரர்களின் நலவாழ்வு சங்கம்,<br>எண்.1, முல்லை நகர் பிராதான தெரு, மேற்கு தாம்பரம் 600 045. | 10 | முதன்மை மண்டல பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை,<br>சேப்பாக்கம்,<br>சென்னை 5 |
| | | 11 | உதவி இயக்குநர்,<br>நில அளவைப் பதிவேடுகள் துறை,<br>காஞ்சிபுரம். |
| | | 12 | மாவட்ட கருவூல அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| | | 13 | மாவட்ட சமூக அலுவலக அலுவலர்,<br>காஞ்சிபுரம் |
| | | 14 | துணை இயக்குநர்,<br>பொது சுகாதார மையப் பொறுப்பாளர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>காஞ்சிபுரம் |
| | | 15 | வருவாய் கோட்ட அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| | | 16 | வருவாய் கோட்ட அலுவலர்,<br>திருப்பெரும்புதூர். |

காஞ்சிபுரம் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, காஞ்சிபுரம் கிளையில் வங்கி கணக்கு எண்.6581717556 துவக்கப்பட்டு, சிறுவகை கனிமங்கள் குவாரி செய்ய அரசுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்காக நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை அலுவலக செலவீனத்திற்கான வங்கி கணக்கு எண்.6883502831 துவங்கி பராமரிக்கப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12.01.2015–க்கு முன்னர் சிறுவகை கனிமங்களாக கிராவல் மற்றும் சவுடு மண் ஆகியவற்றை ஊராட்சி ஏரி மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகளிலிருந்து வெட்டி எடுத்துக் கொள்ள தற்காலிக அனுமதிகள் வழங்கப்படும் இனங்களுக்கும், சிறுவகைகனிம குவாரிக்குத்தகைகளுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 30 சதவிகித தொகை மற்றும் 12.01.2015–க்கு பின்னர் வழங்கப்பட்ட அனைத்துவகையான குத்தகைகளுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 10 சதவிகித தொகை கனிம அறக்கட்டளை நிதியாக 19.05.2017 முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 12.01.2015 முதல் 19.05.2017 வரையிலான குத்தகை காலங்களில் ஏற்கனவே செலுத்தப்பட்ட உரிமக்கட்டணத்திற்குண்டான கனிம அறக்கட்டளை நிதியாக முறையே 10 மற்றும் 30 சதவிகித தொகையை கனிம அறக்கட்டளை நிதிக்கு செலுத்திட சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2022 வரை மொத்த வரவு ரூ.16,37,80,614/-இதுநாள் வரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து நிர்வாக செலவினங்களுக்கு ரூ.16,66,244/–ம், காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை அலுவலக செலவிற்காக மொத்த வரவிலிருந்து 5% வங்கி கணக்கு எண்.6883502831-க்கு ரூ.62,15,705/- ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலக செலவினத்திற்காக 1% 30.05.2019 முதல் 31.03.2022 வரை ரூ.5,08,802/- மற்றும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.8,33,96,881/-ம், மற்றும் செங்கல்பட்டு மாவட்ட குத்தகைதாரர்களிடம் 12.11.2019 முதல் 07.12.2020 வரை வசூலிக்கப்பட்ட தொகை ரூ.71,93,710/–னை செங்கல்பட்டு மாவட்ட கனிம அறக்கட்டளை உருவாக்கப்பட்டு அத்தொகையினை மாற்றம் செய்யப்பட்டது உட்பட மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை ரூ.9,89,81,342/- தற்போது (31.03.2022) ரூ.6,47,99,272/- (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தியெழு இலட்சத்து தொன்னூற்றி ஒன்பதாயிரத்து இருநூற்று ஏழுபத்து இரண்டு மட்டும்) காஞ்சிபுரம் மாவட்ட அறக்கட்டளை வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை அலுவலக செலவின 5% கணக்கு எண்.6883502831-க்கு 31.03.2022 வரை வரவு ரூ.62,15,705/-ம் வட்டி ரூ.68,141/- ஆக மொத்த வரவு ரூ.62,83,846/-ல் அலுவலக செலவினங்கள் ரூ.34,77,106/- ஒதுக்கிடு செய்தது போக தற்போது (31.03.2022) ரூ.28,06,740/- (ரூபாய் இருபத்தியெட்டு இலட்சத்து ஆறாயிரத்து ஏழுநூற்று நாற்பது மட்டும்) காஞ்சிபுரம் மாவட்ட அறக்கட்டளை வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குவாரிப்பணிகளால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக 2018-2019ம் நிதியாண்டில் 91 கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு நலத்திட்டங்கள் மேற்கொள்ள நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டது.

2018 – 2019ம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதி மூலமாக திட்டப்பணிகள் மேற்கொள்ள நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியரால் 10 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.60,67,000/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் முழுவதும் நிறைவடைந்த 6 திட்டங்களின் மதிப்பு ரூ.43,45,000/–ல் திட்டங்கள் நிறைவேற்றிய துறை சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் ரூ.43,22,657/–னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 திட்டங்களின் மதிப்பு ரூ.17,22,000/-னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் ரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2019 – 2020ம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதி மூலமாக திட்டப்பணிகள் மேற்கொள்ள நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டு அரசாணை எண்.213, தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.26.12.2019–ன்படி 5 திட்டங்களின் மதிப்பு ரூ.5,08,86,000/–க்கு ஒப்புதல் வழங்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் முழுவதும் நிறைவடைந்த 4 திட்டங்களின் மதிப்பு ரூ.3,50,86,000/-ல் திட்டங்கள் நிறைவேற்றிய துறை சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் ரூ.3,49,17,897/–னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2020 – 2021ம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதி மூலமாக திட்டப்பணிகள் மேற்கொள்ள நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியரால் 5 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.42,20,600/-ம், அரசாணை எண்.81, தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.18.07.2020–ன்படி 1 திட்டத்திற்கு ரூ.1,45,34,000/–ம், அரசாணை எண்.132,

தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.18.11.2020–ன்படி 11 திட்டத்திற்கு ரூ.2,54,19,000/–ம், அரசாணை எண்.11, தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.02.02.2021–ன்படி 9 திட்டத்திற்கு ரூ.1,15,00,000/– ஆக மொத்தம் 26 திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.5,56,73,600/–ல் திட்டப்பணிகள் முழுவதும் நிறைவடைந்த 17திட்டங்களின் மதிப்பு ரூ.4,41,73,600/- ல் திட்டங்கள் நிறைவேற்றிய துறை சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் ரூ.4,41,56,327/–னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிலுவையிலுள்ள 10 திட்டப்பணிகளை விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட கனிம வள அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு 2021-2022 நிதியாண்டிற்கான கணக்குகள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தலைவர்,<br>
காஞ்சிபுரம் மாவட்ட கனிம அறக்கட்டளை /<br>
மாவட்ட ஆட்சியர்,<br>
காஞ்சிபுரம்.